
# புலமை அறிவு



## தரம் 5

**2020 புலமைப்பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை 06**


**ஆசிரியர்**

**திரு. ந. மனோகரன் BA, Dip in Teach , SLTS II**

(புலமை அறிவு வினாத்தாள் ஆசிரியர் -

(புலமைச் சுடர், மலைமுரசு, ஒளி அரசு புலமைப் பரிசில்,

கிழக்கு மாகாணம் - வினாத்தாள் ஆசிரியர்)

தி/ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை)


MISTAKES
ARE PROOF THAT
YOU ARE
TRYING


**மாணவர் பெயர்**


..............................................................................


| புள்ளித்திட்டம் | |
|---|---|
| பகுதி I | |
| பகுதி II | |
| மொத்தம் | |

# பகுதி I


- **01ஆம், 02ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள உருக்களை அவதானித்து ஒத்த தொடர்புகளைக் காட்டும் உருக்களைத் தெரிவு செய்க.**


**A**


**B**


**C**


**D**


**E**


**F**

01. போக்குவரத்துச் சாதனங்கள் முறையே
 1) Aயும் Bயும் Dயும   2) Bயும் Dயும் Fயும்   3) Cயும் Dயும் Eயும்


02. காற்றினால் இயங்கக்கூடியது முறையே
 1) Aயும் Bயும்   2) Bயும் Eயும்   3) Cயும் Dயும்

- **கீழே தரப்பட்டுள்ள உருக்களை அவதானித்து 3 ஆம் 4 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**


**A**


**B**


**C**


**D**


**E**

03. நீரில் மட்டும் வாழக்கூடிய பிராணிகள்?
 1) B , C   2) A , D   3) E , D

04. பாம்பு உண்ணும் உணவையும் கொக்கு உண்ணாத உணவையும் முறையே காட்டுவது
 1) B , A   2) E, D   3) E , B

www.Paritchai.com

- **தரப்பட்டுள்ள பாடல் அடிகளில் இடைவெளிக்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

கடலிற் பொங்கும் திரையைப் பார்
காற்றில் …………………… நுரையைப் பார்
அலைகள் மோதும் கரையைப் பார்

05. 1) பறக்கும் 2) மிதக்கும் 3) சிதறும்

06. 6m தூரத்திற்கு சீரான இடைவெளியில் நடுவதற்கு 7 கம்புகள் தேவை. 18m தூரத்திற்கு அதே சீரான இடைவெளியில் கம்பு நடுவதற்கு எத்தனை கம்புகள் தேவை ?
1) 21 கம்புகள் 2) 18 கம்புகள் 3) 19 கம்புகள்

07. சுதன் காலையில் வடக்கிலுள்ள பாடசாலை செல்லும் போது அவனது நிழல் விழும் பக்கம் எது ?
1) வலது 2) இடது 3) முன்

08. தந்தையின் வயது எனது வயதின் நான்கு மடங்காகும். இருவரது வயதுகளின் கூட்டுத்தொகை 55 எனின், எனது வயது யாது ?
1) 11 வயது 2) 12 வயது 3) 44 வயது

09. ஆறு பேர் தங்களுக்குள் கை குலுக்கினர் எனின், எத்தனை கைகுலுக்கல் இடம்பெற்றிருக்கும் ?
1) 12 2) 30 3) 15

10. ‘‘வருமானம்’’ என்ற சொல் 21364 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது எனவே ‘‘வருடம்’’ என்ற சொல் குறிப்பது ?
1) 2196 2) 2164 3) 2184


11. 2016 ஆம் ஆண்டு ஒரு நெட்டாண்டாகும். 29 நாட்களைக் கொண்ட பெப்ரவரி மாதம் பின்வரும் எந்த ஆண்டுகளில் வரும் ?
1) 2019 உம் 2023 உம் 2) 2020 உம் 2024 உம் 3) 2021 உம் 2025 உம்

12. ‘‘விளையும் பயிரை முளையிலே தெரியும்’’ என்பதன் கருத்து
1) பேரியவர்களாக வளர சிறியவர்களுக்கு உதவ வேண்டும்
2) பயிர் நன்றாக வளர சிறந்த விதை தேவை
3) ஒருவரின் சிறு வயதுப் பழக்கங்களை வைத்து அவரைப்பற்றி மதிப்பிடலாம்

13. சிலர் வறுமையடைந்தாலும் பொருத்தமற்ற காரியங்களைச் செய்ய மாட்டார்கள் என்பதைக் குறிக்கும் பழமொழி
1) துள்ளுகின்ற மாடு பொதி சுமக்கும்
2) புலி பசித்தாலும் புல்லுத் தின்னாது
3) காற்றுள்ள போதே தூற்றிக்கொள்

www.Paritchal.com

**கீழ்வரும் உருக்களை அவதானித்து 14, 15, 16ஆம் வினாக்களுக்கு சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**




ரூபாய் 90.00 | ரூபாய் 125.00 | ரூபாய் 70.00

14. அப்பிள் பழமொன்றின் விலை யாது ?
   1) ரூபாய் 15.00   2) ரூபாய் 25.00   3) ரூபாய் 20.00

15. மாம்பழமொன்றின் விலை யாது ?
   1) ரூபாய் 15.00   2) ரூபாய் 70.00   3) ரூபாய் 25.00

16. பப்பாசிப் பழமொன்றின் விலை யாது ?
   1) ரூபாய் 55.00   2) ரூபாய் 45.00   3) ரூபாய் 40.00

17. கவிதா புகைப்படம் ஒன்றைப் பார்த்து இவ்வாறு கூறினாள்.
   **“இப்புகைப்படத்தில் இருப்பவர் எனது தந்தையின் மகனாகும்.”** அதன்படி, அப்புகைப்படத்தில் இருப்பவர் கவிதாவின்,
   1) தந்தை   2) மாமா   3) சகோதரன்

18. 

சதுர வடிவான காணி ஒன்றைச் சுற்றி 16 வேலித்தூண்கள் நாட்டப்பட்டிருந்தன. இச் சதுரவரடிவக் காணியை அம்புக்குறியினால் காட்டப்படும் யாதாயினும் ஒரு திசைவழியே பார்க்கும் போது அப்பக்கத்தில் தெரியும் வேலிக்கம்பங்களின் எண்ணிக்கை எத்தனை ?
   1) 4
   2) 5
   3) 6

19. உறையொன்றில் மஞ்சள் நிறப்பந்து ஒன்றும் பச்சை நிறப்பந்துகள் 12 உம் உள்ளன. இரண்டு கண்களையும் மூடிக்கொண்டு கையை உறையினுள் இட்டு பந்து ஒன்றை வெளியே எடுத்தால் நிச்சயமாகக் கிடைப்பது.
   1) மஞ்சள் நிறப்பந்து ஒன்றாகும்
   2) பச்சை நிறப்பந்து ஒன்றாகும்.
   3) பந்து ஒன்றாகும்

www.Paritchai.com

20. 


இங்கு உரு △ யின் பெறுமானம் யாது ?

1) 6  2) 49  3) 81

21. நேற்று சனிக்கிழமை எனின், நாளை மறு நாள் என்ன கிழமை ?

1) ஞாயிறு  2) புதன்  3) செவ்வாய்

22. அருகில் உள்ளது சமபக்க முக்கோண வடிவில் அமைந்த பூப்பாத்தியாகும். ஆப்பூப்பாத்தியில் உள்ள தூண்களின் மொத்த எண்ணிக்கை 33 எனின், ஒரு பக்கத்திலிருந்து பார்க்கும் போது தெரியும் தூண்கள் எத்தனை ?



1) 10
2) 11
3) 12

23. 90 தொடக்கம் 99 வரையுள்ள எண்ணும் எண்களை எழுதும் போது இலக்கம் 9 எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை ?

1) 10  2) 12  3) 11

24. ஜனவரி மாதம் 1 ஆம் திகதி புதன்கிழமை எனின், ஜனவரி மாதம் 9 ஆந்திகதி என்ன கிழமை ?

1) புதன்கிழமை  2) வியாழக்கிழமை  3) வெள்ளிக்கிழமை

25. 

இவ்வுருவில் காணக்கிடைக்கும் செவ்வகங்களின் எண்ணிக்கை

1) 3
2) 5
3) 6

26. இரண்டு தூண்களுக்கிடையிலான தூரம் 3m ஆகும். சமதூர இடைவெளியில் நடப்பட்ட ஆறு தூண்களுக்கிடையிலான தூரம் யாது ?

1) 12m  2) 10m  3) 15m

27. பாடசாலை ஒன்றில் எப்போதும் இருப்பது

1) கட்டடமும் மாணவர்களும்
2) ஆசிரியர்களும் மாணவர்களும்
3) கட்டடமும் தளபாடமும்

www.Paritchai.com


28. ஓர் இலக்கத்தை அதே இலக்கத்தினால் பெருக்கினால் விடை 36 ஆகும். அவ்விலக்கம் யாது ?
1) 5    2) 6    3) 7

29. வரிசையொன்றில் சுரேஸ் நின்று கொண்டிருப்பது வரிசையின் சரி நடுவே ஆகும். சுரேஸிற்குப் பின்னால் நின்று கொண்டிருப்பவர்களின் எண்ணிக்கை 07 எனின், வரிசையில் நின்று கொண்டிருப்பவர்களின் மொத்த எண்ணிக்கை ?
1) 8    2) 14    3) 15

30. என்னிடம் ஒரேயளவான நீளமுள்ள 27 ஈர்க்குத் துண்டுகள் இருந்தன. அதில் நான் ஒரு சதுரமுகியும் ஒரு கனவுருவையும் செய்தேன். அதன்படி என்னிடம் மீதியாகவுள்ள ஈர்க்குத் துண்டுகளின் எண்ணிக்கை யாது ?
1) 5    2) 4    3) 3

31. ‘‘கடுகு சிறிதானாலும் காரம் பெரிது’’ எனும் பழமொழி உணர்த்துவது
1) கடுகின் சிறப்பை
2) சிறியதன் சிறப்பை
3) பெரியதன் சிறப்பை

32. ‘‘வறுமையிலும் செம்மையாக வாழ வேண்டும்’’ என்ற கருத்தைத் தரும் பழமொழி
1) பசி வந்தால் பத்தும் பறக்கும்
2) நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
3) இரக்கப் போனாலும் சிறக்கப் போ

33.



வெற்றிடத்தில் வரவேண்டிய விடையைத் தெரிவு செய்க.
1) 17
2) 54
3) 72

34. இரண்டு ஒற்றையெண்களை கூட்டும் போது
1) ஓர் ஒற்றையெண் கிடைக்கும்
2) ஓர் இரட்டையெண் கிடைக்கும்
3) ஓர் ஒற்றையெண் அல்லது இரட்டையெண் கிடைக்கும்

35. அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான பரீட்சை ஒன்று புதன்கிழமை ஆரம்பித்து சனிக்கிழமை முடிவடைந்தது எனின், பரீட்சை நடைபெற்ற நாட்கள் எத்தனை ?
1) 3 நாட்கள்    2) 4 நாட்கள்    3) 5 நாட்கள்

www.Paritchai.com


- **பின்வரும் பாடலைப் படித்து தரப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.**

ஓடும் உதிரத்தில் - வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப் பார்த்தாலும் - சாதி
தெரிவதுண்டோ அப்பா

36. இப்பாடலின் மூலம் உணர்த்தப்படுவது,
    1) உதிரம் வெவ்வேறானது என்பதனை
    2) கண்ணீர் வெவ்வேறானது என்பதனை
    3) சாதி என்பதே இல்லை என்பதனை


37. இங்கு சாதி எனக் குறிப்பிடப்படுவது
    1) இனம் 2) குலம் 3) மதம்

38.




இவ்வுருவில் செவ்வகம், முக்கோணம், வட்டம் ஆகிய மூன்று வடிவங்களுக்கும் பொதுவான இலக்கம்
1) 4
2) 6
3) 3

39.



இச் செங்கல் குவியலில் எத்தனை செங்கற்கள் இருக்கின்றன?
1) 27
2) 28
3) 29

40. பெரும்பாலானோர் தினமும் பத்திரிகைகள் வாசிப்பது
    1) நாட்டின் புதிய தகவல்களை அறிவதற்காகும்
    2) அறிவை விருத்தி செய்து கொள்வதற்காகும்
    3) விளம்பரங்களைப் பார்ப்பதற்காகும்

www.Pathichai.com

# செய்கை வேலைக்கான பகுதி

www.Paritchai.com

www.Paritchai.com

**01. பந்தியை வாசித்து விடை தருக.**

சந்திரன் அழகானது. சந்திரனை நிலா, அம்புலி, நிலவு, மதி எனவும் அழைப்பதுண்டு. பல புலவர்கள் சந்திரனை வர்ணித்துப் பாடல்கள் பாடியுள்ளார்கள். கவிதைகள் இயற்றியுள்ளார்கள். கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்கள் சந்திரோதயத்தை எவ்வாறு வர்ணிக்கின்றார் எனப் பார்ப்போம்.

1. பந்தியில் கூறப்பட்டுள்ள வான் பொருள் எது? ……………………………………………………
2. சந்திரனுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் எவை? ……………………………………………………
3. கவிஞர்கள் என்பதற்குரிய ஒத்த சொல்? ……………………………………………………
4. வனப்பானது என்பதன் ஒத்த சொல்? ……………………………………………………
5. திங்கள் என்பதன் ஒத்த சொல்? ……………………………………………………
6. செய்யுள்கள் என்பதன் ஒத்த சொல்? ……………………………………………………
7. உயர்திணை படர்க்கைப் பன்மைப் பெயர்ச் சொல்? ……………………………………………………
8. அவர் என்பதன் பன்மை வடிவம்? ……………………………………………………
9. சொற்களை சேர்த்தெழுதுக : பாடி + உள்ளார்கள் ……………………………………………………
10. நிலவின் எழுச்சியை எவ்வாறு அழைப்பர்? ……………………………………………………
11. சொற்களை பிரித்தெழுதுக சந்திரோதயம் ………………………… + ……………………………

**02. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொல்லை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. தோமஸ் அல்வா எடிசன் ''மின்குமிழ்'' பற்றிய ……………………………யில் ஈடுபட்டார் (ஆராய்ச்சி / ஆராச்சி)
2. இலங்கையிலே பெரிய ஆறு மகாவலி கங்கை அதன் ……………………………யில் ஒரு சிறு குடிசை உண்டு. (கறை / கரை)

**03. பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தினை தமிழில் எழுதுக.**

1. I am very happy : ……………………………………………………………………………………
2. Happy birthday : ……………………………………………………………………………………

**04. சிங்கள வாக்கியத்தின் கருத்தினை தமிழில் எழுதுக.**

1. மாமா எனவா : ……………………………………………………………………………………
2. அம்மா உயல இவறத ? : ……………………………………………………………………………

www.Paritchai.com

**05. கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் அறிவித்தல்களா? அறிவுறுத்தல்களா? கட்டளைகளா? எனத் தெரிந்து அடைப்பினுள் எழுதுவோம்.**

1. மின்சாரத்தை வீண் விரயம் செய்ய வேண்டாம் (...........................................................)
2. அடுத்த திங்கள்கிழமை (18.02.2020) மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 4.00 மணிவரையில் எமது பாடசாலையில் சிரமதான நிகழ்வு நடைபெறும் (...........................................................)
3. விளாத்தாளில் எல்லாப்பக்கங்களிலும் உங்களது சுட்டெண்ணைச் சரியாக எழுதுக (...........................................................)
4. நாளை சகல மாணவர்களுக்கும் இலவச பாடநூல்கள் வழங்கப்படும். எனவே மாணவர்கள் அனைவரும் தம்மிடமுள்ள பாடநூல்களை மறக்காமல் கொண்டு வரவும் (...........................................................)
5. சிவப்பு நிறபப் பந்தை எடுங்கள் (...........................................................)

**06. கீழே தரப்பட்டுள்ள சொற்றொடர்களுக்குரிய தனிச்சொல்லைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

i) கைதிகளை தடுத்து வைத்திருக்கும் இடம் : ..........................................................

ii) நாட்டிற்கு விரோதமாக நடத்தல் : ..........................................................................

iii) பொருள் ஒன்றுடன் வேறு ஒரு பொருளைக் கலந்து விடுதல் : ...........................

iv) கல்வித் துறையில் பல மேற்படிப்புப் பயிலும் இடம் : ..........................................

v) வழக்கை தாக்கல் செய்பவன் : ..........................................................................


**வாதி, பல்கலைக்கழகம், தேசத்துரோகம், கலப்படம், சிறைச்சாலை**

**07. கீழே தரப்பட்டவற்றுக்கு அடைப்புக்குள்ளிருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

| உங்கள் | நாங்கள் | எங்கள் | நீங்கள் | புறப்படும் |
|---|---|---|---|---|

| | |
|---|---|
| i) தன்மை | |
| ii) முன்னிலை | |
| iii) படர்க்கை | |

**08. தரப்பட்ட படங்களுக்குரிய பெயரின் ஆங்கில உச்சரிப்பை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**





.............................................................. ..........................................................................



www.Paritchai.com

09. ''நாம் சென்ற கல்விச் சுற்றுலா'' என்ற தலைப்பில் சரியான எழுவாய் பயனிலை புலப்படும் வகையில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்குக் குறையாதவாறு அமைத்தல் வேண்டும். (எழுத்துப் பிழைகள் இருப்பின் புள்ளி வழங்கப்படமாட்டாது)

1. ..........................................................................................

..........................................................................................

2. ..........................................................................................

..........................................................................................

3. ..........................................................................................

..........................................................................................

- **தரப்பட்ட வெற்றிடத்தில் விடையை எழுதுக.**


1) சொற்களில் எழுதுக.
4026 : ..........................................................................................

2) சதுரத்திலுள்ள இலக்கங்களைப் பயன்படுத்தி அமைக்கத்தக்க மிகப்பெரிய எண்ணை எழுதுக.
..........................................................................................

| | |
|---|---|
| **9** | **2** |
| **7** | **4** |

3) தரப்பட்ட உரோம எண்ணில் முந்திய எண்ணையும் பிந்திய எண்ணையும் தருக.

...............................IX ...............................

4) 


பெட்டிக்குள் உள்ள பந்துகளின் எண்ணிக்கையை உரோம எண்ணில் எழுதுக.

..........................................................................................




www.Paritchai.com

5) எண்கோலத்தை அவதானித்து இடைவெளிகளை நிரப்புக.





6)




இக்கடிகார முகம் காட்டும் நேரம் யாது?

..............................................................

7) உருவில் நிழற்றிய பகுதியைப் பின்னமாக எழுதுக.



..............................................................

8) இவற்றுள் 7 இன் மடங்குகளை ஏறுவரிசையில் எழுதுக.


7, 23, 21 , 16, 42, 14, 18,
28, 35, 19, 38

..................................................

9) மு.ப 7.15 க்குப் புறப்பட்ட பேருந்து 45 நிமிடங்கள் பயணம் செய்து பயணத்தை நிறைவு செய்தது எனின், பயணத்தை நிறைவு செய்த நேரம் யாது ?

..............................................................................................................................

10)




பென்சிலின் நீளத்தை சென்ரிமீற்றரில் தருக. ..............................................................

www.Paritchai.com


11) பாத்திரம் ஒன்றில் $3l\ 250ml$ குளிர்பானம் உள்ளது மேலும் $2l\ 825ml$ சேர்க்கப்பட்டால் தற்போதுள்ள குளிர்பானத்தின் அளவு யாது ?

..............................................................................................................................

12) கூட்டுக

| | | |
|---|---|---|
| | 4 Kg | 450 g |
| + | 3 Kg | 230 g |
| | | |

13)




i) அருகில் உள்ள உருளையின் வட்ட முகங்களின் எண்ணிக்கை யாது ?

..............................................................................................

ii) அதன் வளைந்த விளிம்புகளின் எண்ணிக்கை யாது ?

..............................................................................................

14)




A, B ஆகிய இருபாத்திரங்களிலும் உள்ள நீரின் மொத்த கனவளவு?

..........................................................................................

15) 1Kg தேயிலையின் விலை ரூ. 280.00 எனின்,

i. 250g தேயிலையின் விலை யாது?

..........................................................................................


ii. ரூ. 70.00இற்கு வாங்கக்கூடிய தேயிலையின் அளவு யாது?

..........................................................................................

www.Paritchal.com

- **சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. கறுப்பு நிற முட்டையிடும் பிராணி

1) 
2) 
3) 
4) 

2. உப்புக்கட்டிகளை நெருப்பில் போட்டவுடன் நிகழ்வது
   1) உப்புக் கட்டிகள் வெடிக்கும்
   2) உப்புக் கட்டிகள் கரையும்
   3) உப்புக் கட்டிகள் ஆவியாகும்
   4) மேற்கூறிய சகல விடைகளும் பிழையானவை

3. குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்குப் பயன்படுத்தப்படும் பிராணி,
   1) யானை 2) நாய் 3) சிங்கம் 4) ஒட்டகம்

4. கால்கள் மூலம் இரையைப் பற்றிப் பிடிக்கும் பறவை

1) 
2) 
3) 
4) 

5. இலங்கையில் அமைந்துள்ள நீர்வீழ்ச்சியல்லாதது,
   1) துன்ஹிந்த 2) பம்பரகந்த 3) மகாவலி 4) தியலும

6. தேசியக் கொடியில் காணக்கிடைக்கும் வர்ணம் அல்லாதது
   1) பச்சை 2) மஞ்சள் 3) செம்மஞ்சள் 4) கறுப்பு

7. உணவாக சமைப்பதற்குப் பயன்படுத்தப்படும் பூ வகை,
   1) தொட்டாற்சுருங்கி 2) நாக மலர் 3) அகத்தி 4) முள்முருக்கு

8. குயில் முட்டையிடுவது
   1) பருந்தின் கூட்டில்
   2) காகத்தின் கூட்டில்
   3) மரங்கொத்தியின் கூட்டில்
   4) கிளியின் கூட்டில்

9. புளிப்புச்சுவை கொண்ட பழங்களில் அதிகமாக இருப்பது,
   1) விற்றமின் A 2) விற்றமின் D 3) விற்றமின் B 4) விற்றமின் C

10. பத்திரிகை ஒன்றிலுள்ள சிறிய எழுத்துக்களைப் பெரிதாக்கிப் பார்க்க உதவுவது
   1) கைவில்லையினால்
   2) தொலைநோக்கியினால்
   3) நுணுக்குக்காட் டியினால்
   4) முகம் பார்க்கும் கண்ணாடியினால்

www.Paritchai.com

11. அதிக கால்களைக் கொண்ட பிராணி
    1) மண்புழு    2) நத்தை    3) அட்டை    4) மரவட்டை

12. இத்தாவரத்தை எரித்துப் புகையூட்டுவதன் மூலம் நுளம்புகளை விரட்டலாம். அத்தாவரம்
    1) துளசி    2) மரமஞ்சள்    3) திப்பிலி    4) வட்டக்கண்ணி

13. விசர்நாய்க்கடி நோயைப் பரப்பாத பிராணி
    1) நாய்களினால்    2) பூனைகளினால்
    3) கரப்பான்பூச்சியினால்    4) குரங்குகளினால்

14. அரச இலட்சனையில் "சௌபாக்கியத்தைக்" காட்டுவது,




    1) நெற்கதிர்கள்
    2) நிறைகுடம்
    3) சூரியன், சந்திரன்
    4) தர்மச்சக்கரம்

15. இலங்கை அமைந்துள்ளது இந்தியாவிற்கு,
    1) தெற்கில்    2) வடக்கில்    3) மேற்கில்    4) கிழக்கில்

16. கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள நகரம்
    1) திருகோணமலை    2) புத்தளம்    3) காலி    4) கண்டி

17.




இப்பொலிஸ் அதிகாரி வழங்கும் சமிக்ஞையினால் கருதப்படுவது,
    1) முன்னால் வரும் வாகனங்கள் நிறுத்துக.
    2) முன்னாலும் பின்னாலும் வரும் வாகனங்கள் நிறுத்துக.
    3) பின்னால் வரும் வாகனங்கள் நிறுத்துக.
    4) பின்னால் வரும் வாகனங்கள் முன்னால் செல்க

18. சித்திரை மாதத்தில் அதிகமாக ஒலி எழுப்பும் பறவை
    1) ஆந்தை    2) வௌவால்    3) கிளி    4) குயில்

19. வானவில் காலையில் தோன்றும் திசை
    1) கிழக்கு    2) மேற்கு    3) தெற்கு    4) வடக்கு

20.



இவ்வுபகரணம் பயன்படுத்தும் தொழிலாளி
    1) மேசன்
    2) தச்சன்
    3) நெசவுத் தொழிலாளி
    4) கொல்லன்




21. ஒலிம்பிக் கொடியிலுள்ள நிறம் அல்லாதது
1) நீலம் 2) மஞ்சள் 3) சிவப்பு 4) ஊதா

22. இரவு வேளையில் மாத்திரம் பார்வைத்திறன் கொண்ட பிராணி
1) 
2) 
3) 
4) 

23. மட்பாண்ட உற்பத்தியில் பயன்படுத்தப்படுவது,
1) செக்கு 2) மடைக்கதவு 3) வனைசில்லு 4) மணியாசு



24. தற்போது இலங்கையில் புழக்கத்திலுள்ள காசுத்தாள்களில் பெறுமதியில் கூடிய காசுத்தாள்,
1) ரூபா 2000.00 2) ரூபா 1000.00 3) ரூபா 10,000.00 4) ரூபா 5000.00

25. நான்கு சோடிக் கால்களையுடைய ஒரு பிராணி
1) தேள் 2) நண்டு 3) வீட்டு ஈ 4) நுளம்பு

26. மூளை வளர்ச்சி கூடிய பிராணி
1) 
2) 
3) 
4) 

27. நண்பகல் வேளையில் பூக்கும் தாவரம் ?
1) கொடித்தோடை 2) திப்பிலி 3) மிளகு 4) கடுபுல்

28. வானவில் ஒன்றில் காணப்படும் நிறமல்லாதது
1) செம்மஞ்சள் 2) சிவப்பு 3) ஊதா 4) வெள்ளை

29. தனது கழிவுகளை குழி தோண்டி புதைக்கும் பிராணி
1) 
2) 
3) 
4) 

30. ஒளியின் பயணத்தைத் தடுக்க முடியாத பொருள் எது ?
1) பலகை 2) கண்ணாடி 3) செங்கல் 4) இரும்புத் தகடு

www.Paritchai.com